கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 52/2016

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 சித்ரா திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 12.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது பெயர் சித்ரா. நான் என்ன பதவியில் உள்ளேன் என்றால் கடவூர் தாலுகாவில் தலையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். எத்தனை வருடங்களாக மேற்கண்ட பணியில் உள்ளேன் என்றால் சுமார் 1½ மாதங்களாக உள்ளேன். தற்போது கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் தேர்தல் தனித்துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நான் வட்டாட்சியரிடமிருந்து அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2. செம்பிநத்தம் கிராமத்தில் சர்வே எண்.1073 ன் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் மொத்தமாக ஹெக்டேர் 4.58.00 ஏர்ஸ் ஆகும். செட்டில்மென்ட் எந்த வருடம் ஏற்பட்டது என்றால் நிலவுடமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முன்பு நடந்தது. வா.சா.ஆ.2 ஆவணம் செட்டில்மென்ட் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண்.1073 ன் விஸ்தீரனம் எவ்வளவு கண்டுள்ளது என்றால் ஏக்கர் 11.32 சென்ட் உள்ளது. மேற்படி புல எண்ணானது புல எண்.1073/1, 1073/2, 1073/3 மற்றும் 1073/4 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

3. வா.சா.ஆ.2 ஆவணம் நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு புல எண்.1073 என்ன புல எண்ணில் இருந்தது என்றால் பைமாஸ் எண்ணாக இருந்தது. பைமாஸ் எண் தெரியாது. சர்வே எண்.1073 ன் உட்பிரிவு அனைத்திற்கும் தனித்தனியாக பைமாஸ் எண் இருந்தது என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ–1 ஆவணத்தின் படி 1959 ல் வாதி மாரிமுத்து வகையறா கிரையம் பெற்ற பைமாஸ் எண் 97 என்றால் சரிதான். அப்போது பைமாஸ் எண்.97 குழி கணக்கில்

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தில அவ்வாறு தான் காண்பிக்கப்பட்டுள்ளது.

4. ஒரு குழி என்பது எத்தனை சென்ட் என்றால் 44 சென்ட் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.1073/2 ஆனது 12.15.2 குழி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1073/2 மொத்தமாக ஏக்கர் 5.32 சென்ட் என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி செட்டில்மென்டிற்கு பிறகு மேற்படி சர்வே எண்.1073/2 ன் விஸ்தீரனம் 5.2 சென்ட்டாக மாறியுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. சர்வே எண்ணை உட்பிரிவு செய்ய என்ன முறையை பின்பற்றுவோம் என்றால் அனுபவத்தின் பேரிலும், ஆவணத்தின் பேரிலும் உட்பிரிவு செய்யப்படும்.

5. ஆவணத்தின் படி உட்பிரிவு செய்திருந்தால் ஏக்கர் 5.32 சென்ட் என்ற விஸ்தீரனம் ஏக்கர் 5.2 சென்ட்டாக எவ்வகையில் மாற்றப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.1073/4 எப்போது அனாதீனமாக வகைபாடு செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை. தற்போதைய ஆவணத்தில் அனாதீனமாக தான் உள்ளது. சர்வே எண்.1073/4 ன் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி ஏக்கர் 2.63 சென்ட் உள்ளது. நிலவுடமை மேம்பாட்டு அ பதிவேட்டில் சர்வே எண்.1073/4 அனாதீன நிலமானது தற்போது ஹெ 0.03.00 ஏர்ஸாக உள்ளது.

6. வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி புல எண்.1073/4 லிருந்து தான் புல எண்.1073/5 என உட்பிரிவாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1073/5 தற்போது எவ்வளவு வீஸ்தீரனம் உள்ளது ஏக்.2.55 சென்ட் (ஹெ.1.03.50 ஏர்ஸ்) உள்ளது. புல எண்.1073/5 ஆனது தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் மு.மல்லா நாயக்கர் பெயரில் உள்ளது. எதன் அடிப்படையில் அவர் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அனாதீன நிலத்தை தனி நபருக்கு பட்டா வழங்க கூடாது என்ற விவரம் குறித்து அரசாணை உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அனாதீன நிலமானது அரசாங்கத்தால் நிலம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் நிலம் என்றால் அது பற்றி தெரியாது.

7. வா.சா.ஆ.1 படி புல எண்.1073/4ல் உள்ள அனாதீன நிலத்தை தனிநபர் யாருக்கும் பட்டா வழங்க கூடாது என்று வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் வா.சா.ஆ.9ன் படி தகவல் கொடுத்துள்ளார். புல எண்.1073/4 மற்றும் 1073/5 ல் வாரி உள்ளதா என்றால் அ பதிவேட்டின் படி இல்லை. வா.சா.ஆ.8 நிலபுல வரைபடத்தில் அவ்வாறு உள்ளதா என்றால் புல எண்.1073/4 மற்றும் 1073/5ல் வாரி இல்லை. தாசில்தார் கொடுத்த வா.சா.ஆ.7 நிலபுல வரைபடத்தில் வாரி உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி புல எண்.1073/5ல் உள்ள 50 சென்ட்டில் உள்ள காட்டுவாரியை பொறுத்து வாதியின் பெயரில் அனுபவ சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி தற்போது வரை வாதி தான் புல எண்.1073/5ல் அனுபவம் செய்து வருவதாக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.1073/5ல் வாதி பூர்வீகமாக அனுபவித்து வருவதால் பட்டா மாற்றம் செய்யலாம் என்று வா.சா.ஆ.5 ஆவணத்தில் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் குறிப்பாணை பிறப்பித்துள்ளார்.

9. மேற்படி குறிப்பாணை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி புல எண்.1073/3(பைமாஸ் எண்.758) தற்போது யார் பெயரில் எவ்வளவு விஸ்தீரனத்தில் உள்ளது என்றால் மேற்படி புல எண்ணானது 1073/3A முதல் 1073/3E வரை தற்சமயம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உட்பிரிவுகளின் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் புல எண்.1073/3A ல் ஹெக்.0.18.5 ஏர்ஸ் உள்ளது. புல எண்.1073/3B ல் ஹெக்.0.18.5 ஏர்ஸ் உள்ளது. புல எண்.1073/3C ல் ஹெக்.0.18.00 ஏர்ஸ் உள்ளது. புல எண்.1073/3D ல் ஹெக்.0.19.5 ஏர்ஸ் உள்ளது. புல எண்.1073/3E ல் ஹெக்.0.31.5 ஏர்ஸ் உள்ளது.

10. புல எண்.1073/3ன் (பைமாஸ் எண்.758) மொத்த விஸ்தீரனம் ஏக்.2.62 சென்ட் என்றும், என்னிடம் காட்டபடும் ஆவணத்தின் படி அதில் தற்போது புல எண்.1073/3Eல் வாதி வகையறா தலமக்காளுக்கு 65

சென்ட் நிலத்தை மட்டும் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தின் பறறி எனக்கு தெரியாது. தற்போத தலமக்காள் பெயரில் புல எண்.1073/3E ல் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் சுமார் 77 சென்ட். ஆவணத்தின் படி 65 சென்ட் நிலம் கிரையம் செய்து கொடுத்த போது தற்போது பட்டாவில் 77 சென்ட் எப்படி வந்தது என்றால் அது பற்றி தெரியாது.

11. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் புல எண்.1073/4 மற்றும் 1073/5 ன் மொத்த விஸ்தீரனம் ஏக்கர் 2.63 சென்ட் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.1073/4 ல் ஆழ்துளை கிணறு உள்ளதாக மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ல் கிணறு என்று மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், நான் எந்த ஆவணத்தை பரிசீலிக்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது**.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

YUGHATHY MARIYA Digitally signed by YUGHATHY MARIYA Date: 2025.11.12 17:53:42 +0530

**Additional District Munsif,**
**Kulithalai.**